# கணக்கீடு

## வருமானம்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

**தேர்ச்சி 11.0**

**தேர்ச்சி மட்டம் 11.9 வருமானங்களை இனங்காண்பதற்கான கணக்கு வைப்புக்களை மேற்கொள்வாவர்**

## இலங்கை கணக்கீட்டு நியமம் - 18
## வருமானம் (Revenue)

**வரவிலக்கணம் (Definition)**

உரிமையாளர்களின் நேரடிப் பங்களிப்பு இன்றி சாதாரண வியாபார நடவடிக்கையினால் பொருளாதார நலன்களின் மொத்த வியாபார நடவடிக்கையினால் பொருளாதார நலன்களின் மொத்த உட்பாய்ச்சலினால் உரிமையாண்மையின் ஏற்பட்ட அதிகரிப்பே வருமானம் ஆகும்.

**வருமானங்களை இனங்காணல் (Recognition of Revenue)**

யாதாயினும் வருமானமொன்றினை புத்தகங்களில் பதிவு செய்வதற்கு பின்வரும் இரு நியதிகள் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

1. எதிர்கால பொருளாதார நலன்கள் வணிகத்தினுள் உள்வருவது நிச்சயமாக இருத்தல்.
2. இந்நலன்கள் நம்பகத்தன்மை கொண்டதாகவும், அளவிடக்கூடியதாகவும் இருத்தல்.

**கொடுக்கல் வாங்கலொன்றை இனங்காணல் (Identification of A Transaction)**

இந்நியமத்தின் அடிப்படையில் வருமானங்களை உருவாக்கும் கொடுக்கல் வாங்கல் மூன்றினை இனங்காண முடியும்.

1. பொருள் விற்பனை கொடுக்கல் வாங்கல்கள்
2. சேவை வழங்குதல் கொடுக்கல் வாங்கல்கள்
3. நிறுவனச் சொத்துக்களை வேறு தரப்பினர்கள் பயன்படுத்துவதனூடாகக் கிடைக்கும் தொகைகள்

உதாரணம் : வட்டி, இறை, பங்குலாபங்கள்

தொகுப்பு : திரு.ந.குமரகுருபரன் - ஆசிரியர் - கணக்கீடு (யா/வைத்தீஸ்வரா கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.கிரிசாந்தன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk